

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 18

MAY 2026

ஆகாரம் : 05

நீர் ஏழைக்குப்

**பெலனும்,**

நெருக்கப்படுகிற எளியவனுக்குத்

**திடனும்,**

பெருவெள்ளத்துக்குத் தப்பும்
அடைக்கலமும்,வெயிலுக்கு ஒதுங்கும்

**நிழலுமானீர்.**

ஏசாயா 25:4

# UPCOMING EVENTS

**All Sun May '26** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**09 May '26** — Saturday
7:30 pm
**CHURCH GENERAL BODY MEETING**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**30 May '26** — Saturday
7:30pm - 09:30pm
**PRAISE AND WORSHIP SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**All Wed May '26** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**02 May '26** — Saturday
10:30am
**FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**09 23 May '26** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING CHURCH SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**30 May '26** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ**
**ISAIAH 21-66**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**31 May '26** — Sunday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**02 16 May '26** — Saturday
10:30am
**HOLY COMMUNION SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**31 May '26** — Sunday
10:30am - 01:00pm
**MINISTRY LEADERS RETREAT**
Kanad Hospital-Majlis Hall

**All Sat May '26** — Saturday
6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE




அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். 1856 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வர்ஜீனியாவில் பிறந்த ஆப்பிரிக்க– அமெரிக்க புக்கர். டி வாஷிங்டன் ஆவார். இவரது தாயார் அமெரிக்க செல்வந்தர் ஒருவரின் இல்லத்தில் அடிமை வேலை செய்தவர். புக்கர் கருப்பர் இனம் என்பதால் இளமையில் மிகக் கடுமையாக கஷ்டப்பட்டு, கல்வி பயில அரும்பாடு பட்டுள்ளார். கருப்பர் இன மக்களுக்கான உடையான சாக்கு உடை அணிந்து மிகுந்த வேதனையோடு கடினமாக உழைத்து, கல்வி பயின்று முன்னேறியவர் புக்கர் ஆவார். 1863ஆம் ஆண்டில் புக்கர் ஆற்றிய **'வெற்றி பெறுகின்ற ஆற்றல்'** என்ற தலைப்பிலான சொற்பொழிவு மிகப்பெரிய அசைவை ஏற்படுத்தியது. பின்னாளில் கருப்பரின மக்களுக்கான பள்ளியைத் தொடங்கி விழிப்புணர்வையும், வழிகாட்டுதலையும் ஏற்படுத்தினவர். புக்கர் அவர்கள் சிறந்த கல்வியாளர், சீர்திருத்தவாதி, எழுத்தாளர்மற்றும் பேச்சாளர் ஆவார். இவர் அமெரிக்க அதிபர்களுக்கு ஆலோசகராக இருந்துள்ளார். அமெரிக்க நாட்டின் தபால் தலையில் இடம் பெற்ற முதல் ஆப்பிரிக்க – அமெரிக்கர் இவரே. உழைப்பால் உயர்ந்த புக்கர். டி வாஷிங்டன் அவர்கள் 1915 ஆம் ஆண்டு மண்ணுலக ஓட்டத்தை முடித்தவர்.

## உழைப்பு:

ஆண்டவராகிய கர்த்தர் உலகனைத்தையும் ஆறு நாட்களில் படைத்து முடித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி2:2). படைப்பாளராகிய கடவுள் அதிசயிக்கத்தக்க அனைத்தையும் படைத்து,படைப்பின் மகுடமாக மனிதனையும் தம் சாயலில் படைத்து ஓய்ந்திருந்தார்.

மனிதருக்கு தேவையானது உழைப்பு என்பதனைக் கடவுள் முன்மாதிரியாக வைத்துள்ளார். உழைக்கின்ற மனிதருக்கு ஓய்வு தேவை என்பதையும் கற்றுத் தருகிறார். எனவேதான் கர்த்தர் மோசே வழியாகக் கொடுத்த 10 கட்டளைகளில், ஆறு நாளும் நீ வேலை செய்வாயாக. ஏழாம் நாளில் ஓய்ந்திரு (யாத் 20:9,10) என்றார். அந்த ஓய்வு நாளில் நீயோ, உன் வீட்டில் உள்ளவர்களோ, உன் மிருகஜுவன்களோ எந்த வேலையும் செய்யக்கூடாது என்று கட்டளைக் கொடுத்தார்.

## தேவையானது

பிரியமானவர்களே, மே மாதம் முதல் நாளை அகில உலக தொழிலாளர் தினம் என்று கடைப்பிடிக்கின்றனர், இது நல்லது. ஒவ்வொரு உழைப்பாளருக்கும் ஓய்வு தேவையானது. அதனை நினைவுபடுத்துவதே மே முதல் நாள் ஆகும். திருமறையும் இதனை உறுதிப்படுத்திக் கூறுகிறது. ஒவ்வொரு மனிதரும் உழைக்க வேண்டும், ஓய்ந்திருக்க வேண்டும் என்பதே. இதில் தேவையானது, ஆறு நாட்களும் உழைக்கக் கடவுள் கொடுத்த அனைத்து அருள் நலன்களையும் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிற, துதிக்கிற, ஆராதிக்கிற ஏழாம் நாளில் ஆண்டவரை மறவாது, அவரின் திருச்சமுகத்தை நாடி, தேடி, ஓடி அவர் தம் திருப்பாதங்களில் காத்திருத்தல் வேண்டும், ஓய்ந்திருக்க வேண்டும் என்பதே. ஏழாம் நாள் ஓய்வு நாள், அது தூய்மையான நாள் (யாத் 20:8) இதை கவனிக்க வேண்டும்.

## அடைக்கலமானவர்

கடவுளின் வாக்குப்படி உழைக்கின்ற, ஓய்வெடுக்கின்ற எளியவர்களுக்கு கர்த்தரே பெலனும், அடைக்கலமுமாக (யாத் 25:4) இருக்கின்றார். பிரியமானவர்களே, எளியவர்களோடு தம்மை இணைத்துக் கொள்ளுகின்ற கடவுள், ஆற்றல்படுத்துகின்ற அடைக்கலமானக் கடவுள் நம்மோடும் வாழ விரும்புகின்றார். கர்த்தருக்கு நம் உள்ளத்திலும், நமது இல்லத்திலும் இடம் அளிப்போமா?

நமது ஆபத்துக் காலத்தில் பெலனும், கேடகமுமாய் செயல்படுகின்ற கடவுள்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக,

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# அர்ப்பணிப்புள்ளக் கன்னிகள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்தப் பகுதியில் புத்தியுள்ள கன்னிகள் எண்ணெய் மற்றும் தீவட்டிகளை உடன் எடுத்துச் சென்றார்கள். ஆனால் புத்தி இல்லாதவர்கள் தங்கள் கரங்களில் தீவட்டிகளை எடுத்துச் சென்றனர் ஆனால் எண்ணெயைக் கொண்டு போகவில்லை. இந்த உவமையை ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்லுவதற்கான காரணம் நாம் பரலோகத்திற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் (மத்25:13) என்பதனையே. இதனை இந்த அதிகாரத்தில் மீண்டும் மீண்டும் இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறதை நாம் பார்க்க முடியும்.

புத்தியுள்ளவர்கள், புத்தியற்றவர்கள் என இரண்டாகப் பிரித்து நாம் இப்பகுதியில் பார்க்கலாம்.

### புத்தியுள்ளவர்கள்: (மத்25:4)

வேதத்தில் புத்தியோடு செயல்பட்டப் பெண்களை நம்மால் பார்க்க முடியும். சாராள், ரெபேக்காள், மிரியாம், மோசேயின் மனைவி சிப்போராள் (யாத்2:21), ரூத், நகோமி, எஸ்தர் தெபோராள், சூனேமியாள், இன்னும் அநேகப் பெண்கள்...

- சாராள் தன் கணவனை ஆண்டவனே எனக் கூறுவதையும், அவர் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதையும் பார்க்க முடியும்.

- நோவாவின் மனைவி கணவர் செய்வதற்கு அப்படியே உறுதுணையாக இருந்து செயல்படுகிறார்.

- மோசேயின் தாய் ஞானமாய், பார்வோனின் மகள் வரும் வேளையில் குழந்தையை நதியில் விடுகிறதைப் பார்க்கிறோம்.

- மிரியாம் ஞானமாய் பார்வோனின் மகளிடம் பேசி, மோசேயை எபிரேயக் குழந்தையாகவே வளரச் செய்வதற்கான வழிவகை செய்வதை பார்க்கிறோம்.

- சிப்பிராள், பூவாள் என்னும் மருத்துவச்சிகள் கடவுளுக்கு பயந்ததால், தங்கள் உயிரையும் துச்சமாக எண்ணி செயல்பட்டனர், ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

- எஸ்தர் தன் உயிரைப் பணையம் வைத்து, தன் மக்களுக்காக ராஜாவிடம் பேசுவதைப் பார்க்கிறோம்.

- தெபோராள் இஸ்ரவேலருக்குள் முதல் நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும், குடும்பத்தில் நல்ல மனைவியாகவும் வளம் வந்ததைப் பார்க்க முடிகிறது.

- நகோமி, ரூத், சூனேமியாள், எலிசபெத், மரியாள், மகதலேனா மரியாள், தபித்தாள், பிரிஸ்கில்லா இன்னும் அநேகப் பெண்கள் புத்தியுள்ள செயல்களைச் செய்து நமக்கான முன்மாதிரிகளை வைத்துள்ளார்கள்.

## புத்தியில்லாதவர்கள் (மத் 25:3)

- ஏவாள் ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படியாதறததால் பாவம் மனுக்குலத்தில் நுழைந்தது.
- லோத் மனைவி பின்னிட்டுப் பார்த்ததால் உப்புத் தூணாக மாறினதைப் பார்க்க முடிகிறது.
- தெலீலாள் சிம்சோனை ஏமாற்றி மரணத்திற்கு ஒப்புவிக்கிறதைப் பார்க்கிறோம்.
- யோபுவின் மனைவி விசுவாசத்தைக் குறைக்கும் வார்த்தைகளை பேசுவதைப் பார்க்கிறோம்.
- சப்பிராள் கணவன் செய்யும் தவறுக்கு துணை போகிறாள், அதனால் இருவரும் மரிக்கின்றனர்.
- ஆமானின் மனைவி தவறான ஆலோசனைகளைக் கூறியதால் அவன் வைத்த தூக்கு மரத்திலேயே தூக்கிலிடப்படுகின்றனர்.

இப்படி அனேக வேதச் சாட்சிகள் நமக்கு முன் இருக்கிறது. நாம் நல்ல பங்கைத் தெரிந்து கொள்ள வேண்டும், புத்தியோடு செயல்பட வேண்டும்.

- ஆண்டவரின் இரக்கத்தை மட்டும் பார்த்துவிட்டு, அவரின் நீதி, நியாயத்தை பார்க்கவில்லை என்றால் நாம் தண்டிக்கப்படுவோம்.
- இது கடைசிக் காலம், கிருபையின் காலம் ஆண்டவரின் வருகைக்கு நாம் ஆயத்தமாவோம், புத்தியோடு செயல்படுவோம்.

கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P. Velanganni*

## மன்னா ஏப்ரல்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. ஏப்ரல் மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்-3, ஆயர் மடலில் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆதார-ங்களும் விசுவாச வாழ்வைப் பற்றி புரிந்து நாம் வாழவும், பக்-4, அர்ப்பணிப்புள்ள குடும்பம் பிரிஸ்கில்லா-ஆக்கில்லா ஆகியோரின் குடும்ப வாழ்வு நமக்கான மாதிரியான வாழ்வு என்றும், பக்-6, செயலர் மடலில், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்பதில் நம் விசுவாச வாழ்வை மறு ஆய்வு செய்திட அழைக்கும் அறைக்கூவலாகவும், பக்-8ல், கர்த்தர் கூறுவது, நான் சம்பாதித்த பிள்ளைகளாகிய உங்களை நான் மறப்பேனோ? உங்களை என் கைகளில் இருந்து பறிப்பவன் யார்? என்றும், பக்-9ல், கடவுள் தம்மையே நமக்காகக் கொடுத்தார், கிறிஸ்தவ வாழ்வில் கொடுத்து வாழ்வதே கடவுள் காண்பித்த "அன்பின் வழி" என்றும், பக்-10ல், யோசேப்பு என்கிற தனிமனிதரின் நீதியுள்ள வாழ்வின் வழியே இஸ்ரவேல் இனமே வாழ்வடைந்தது, நாமும் நீதியாக வாழ வேண்டும் என்றும், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கைவண்ணங்களும்,யோபு நூலின் வினாக்களுக்கான விடைகள் எழுதியோர், சிறுபிள்ளைகளுக்கான புதிர்கள், VBS புகைப்படங்கள் என அனைத்தும் ARTICLE எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபையின் மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் பெரிதான கிருபையினால் கடந்த நான்கு மாதங்கள் கண்ணின் மணி போல பாதுகாத்து வழிநடத்தி வந்தார். பெரிதான கிருபைகாய் முழுமனதோடு நன்றி செலுத்தவும். தேவன் தாமே காத்து வருவதற்காய், நன்றி ஏறெடுப்போம். நம் சிறப்பாக கொண்டாடின சபை நாளுக்காய் நன்றி செலுத்துவோம். அதைப்போல சபை பொதுக்குழு கூட்டத்திற்காக புதிய காரிய குழு மக்கள் தேர்ந்தெடுக்கப்பட, திருச்சபையும் ஊழியங்கள் தொய்வின்றி நடைபெற இறைவனை மன்றாடி கேட்டுக்கொள்வோம். நன்றி.

## நீர் ஏழைக்குப்பெலனும் – ஏசாயா 25:4 அடிப்படையில் சிந்தனை

"நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்" என்ற இந்த வசனம், மனித வாழ்க்கையின் பலவீனமான தருணங்களில் தேவன் எவ்வாறு நமக்குத் துணையாக இருக்கிறார் என்பதை ஆழமாக எடுத்துரைக்கிறது. இந்த வசனத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் நம் வாழ்வின் அனுபவங்களோடு நேரடியாக இணைகிறது.

முதலில், "ஏழைக்குப் பெலன்" என்று கூறப்படுகிறது. ஏழை என்பது பணம் இல்லாதவர்களையே மட்டும் குறிக்கவில்லை மனதளவில் சோர்ந்து போனவர்களும், ஆதரவு இல்லாமல் துன்பத்தில் வாழ்பவர்களும் ஏழைகளாகவே கருதப்படுகிறார்கள். இவ்வாறான சூழ்நிலைகளில் மனிதர்கள் பலவீனமாக உணர்கிறார்கள். ஆனால் தேவன் அவர்களுக்கு பெலனாக இருக்கிறார். நாம் செய்ய முடியாததை அவர் நமக்காக செய்கிறார். அவர் தரும் உற்சாகம், நம்பிக்கை, மற்றும் ஆற்றல் நம்மை மீண்டும் எழுந்து நிற்க வைக்கிறது.

அடுத்து, "நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடன்" என்று கூறுகிறது. வாழ்க்கையில் பல சோதனைகள் வருகின்றன. சில நேரங்களில் அந்த சோதனைகள் நம்மை அழுத்தி நசுக்கும் அளவிற்கு இருக்கும். குடும்ப பிரச்சினைகள், உடல்நலம் குறைவு, பொருளாதார சிக்கல்கள் போன்றவை நம்மை தளரச் செய்யலாம். ஆனால் தேவன் அந்த நெருக்கமான சூழ்நிலைகளில் நமக்கு திடமாக நிற்கும் சக்தியை அளிக்கிறார். அவர் நமக்கு மன அமைதியையும், தைரியத்தையும் தருகிறார்.

"பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலம்" என்பது மிக ஆழமான உண்மையை எடுத்துரைக்கிறது. பெருவெள்ளம் என்பது திடீரென வரும் ஆபத்துகள், எதிர்பாராத சோதனைகள், வாழ்க்கையை சீர்குலைக்கும் நிகழ்வுகளை குறிக்கிறது. அத்தகைய சூழ்நிலைகளில் மனிதன் தப்பிக்க இடம் தேடுகிறான். தேவன் அந்த அடைக்கலமாக இருக்கிறார்.

அவரிடத்தில் நாம் ஓடிச் சென்றால், அவர் நம்மை பாதுகாப்பார். உலகம் முழுவதும் குழப்பம் இருந்தாலும், தேவனுடைய சந்நிதியில் நாம் அமைதியை காண முடியும்

இறுதியாக, "வெயிலுக்கு ஒதுங்கும் நிழல்" என்று கூறுகிறது. வெயில் என்பது வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை குறிக்கிறது—அழுத்தம், உழைப்பு, மன அழுத்தம், துன்பம் போன்றவை. இந்த வெயிலில் நிழல் எவ்வளவு அவசியமோ, அதுபோல தேவனுடைய சந்நிதி நமக்கு ஓய்வையும், சாந்தத்தையும் தருகிறது. அவர் நம்மை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், நம்மை புத்துணர்ச்சியடையச் செய்கிறார்.

இந்த வசனம் நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவுபடுத்துகிறது: மனிதர்கள் நம்மை எல்லாக் காலங்களிலும் காக்க முடியாது. ஆனால் தேவன் எப்போதும் நம்முடன் இருக்கிறார். அவர் நமக்கு பெலனாகவும், திடனாகவும், அடைக்கலமாகவும், நிழலாகவும் இருக்கிறார். நாம் எந்த சூழ்நிலையிலும் இருந்தாலும், அவரை நம்பி வாழ்ந்தால் நமக்கு பயமில்லை. இன்றைய வேகமான உலகில் மனிதர்கள் பல பிரச்சினைகளால் சோர்ந்து போகிறார்கள். மன அழுத்தம், போட்டி, எதிர்பார்ப்புகள் ஆகியவை அவர்களை தளரச் செய்கின்றன.

ஆனால் இந்த வசனம் நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. நாம் தனியாக இல்லை. நம்முடன் தேவன் இருக்கிறார். அவர் நம்மை வழிநடத்துகிறார், காக்கிறார், மற்றும் நம்மை முன்னேற்றுகிறார்.

அதனால், நம்முடைய வாழ்க்கையில் எந்த சோதனைகள் வந்தாலும், நாம் தேவனை நோக்கி திரும்ப வேண்டும். அவரிடத்தில் நம்பிக்கை வைத்து ஜெபிக்க வேண்டும். அவர் நமக்கு தேவையான உதவியை சரியான நேரத்தில் அளிப்பார். நாம் பலவீனமாக இருந்தாலும், அவர் நமக்கு பலமாக இருப்பார்.

முடிவாக, "நீர் ஏழைக்குப் பெலனும்…" என்ற இந்த வசனம் நம் வாழ்வில் ஒரு உறுதியான நம்பிக்கையை உருவாக்குகிறது. தேவன் நமக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதால், எந்த சோதனையும் நம்மை வெல்ல முடியாது. நாம் அவரை நம்பி நடந்தால், நிச்சயமாக வெற்றி பெறுவோம். ஆமென்.

இறைப் பணியில்

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்

# எவைகள் உண்மையான மனந்திரும்புதல் இல்லை

நாம் மனந்திரும்பியிருக்கின்றோமா? அப்படியானால், நம் மனம்திரும்புதல் உண்மையானதுதானா என்பதை நாம் உறுதிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் இன்று சாத்தான் போலியான மனந்திரும்புதலின் மூலமாய் அநேக ஜனங்களை ஏமாற்றி வஞ்சிக்கிறான்.

"நீ ஒருவராலும் பிடிக்கப்படமாட்டாய்" என்ற தைரியத்தின் அடிப்படையில் இன்று அநேக ஜனங்கள் ஜீவித்துக்கொண்டிருப்பதை சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான். ஆகவே, ஒருவராலும் பிடிக்கப்படாமல் எவ்விதம் பாவம் செய்ய முடியும் என்ற தந்திர உபாயங்களையெல்லாம் அவர்களுக்கு சாத்தான் போதித்து வருகிறான்.

இவ்விதமே வேதாகமத்திலும் போலியாய் மனந்திரும்பிய சில உதாரனங்களை பார்கிறோம். சவுல் ராஜா தேவனுக்குக் கீழ்படியாமற் போனதும், தான் பாவம் செய்ததாக சாமுவேல் தீர்க்கதரிசியிடம் ஒத்துக்கொண்டான். ஆனால் தன்னுடைய பாவத்தை ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு அவன் விரும்பவேயில்லை. ஆம் அவன் உண்மையான மனந்திரும்புதல் அடையவே இல்லை. சவுல், தான் கையுமெய்யுமாய் பிடிக்கப்பட்டதினிமித்தமே துக்கமடைந்திருந்தான் (1 சாமு. 18:24-30). ஆனால் தாவீது ராஜாவோ சவுலுக்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டான். தாவீது ராஜா பாவத்தில் வீழ்ச்சியடைந்தபோது, அவைகளைப் பகிரங்கமாய் அறிக்கை செய்து மனந்திரும்பினான் (சங்கீதம் 51).

சவுலைப் போலவே ஆகாப் என்ற ராஜாவும் இருந்தான். தேவன் ஆகாப் ராஜாவை நியாயந்தீர்க்கப்போகிறார் என்ற எச்சரிப்பை எலியா தீர்க்கதரிசியின் மூலம் கேட்டமாத்திரத்தில், அவன் அதற்காக துக்கித்தான். அவன் இன்னும் ஒருபடி கடந்து தன் பாவங்களுக்காக இரட்டுடுத்தி துயரம் கொள்ளவும் செய்தான் (1 இரா. 21:27-29). ஆனால் அவனோ உண்மையாய் மனந்திரும்பவில்லை. அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்காக அஞ்சினான் அவ்வளவுதான்.

போலியான மனந்திரும்புதலுக்கு யூதாஸ்காரியோத்தும் ஓர் மாதிரியாகவே காணப்படுகிறான். இயேசுகிறிஸ்துவுக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டதை கண்டவுடன் மிகுந்த மனஸ்தாபப்பட்டு, "நான் பாவஞ்செய்தேன்" எனக் கூறினான் (மத்.27::3-5). இன்று அநேகர் செய்வதைப்போலவே இவன் தன் பாவ அறிக்கையை ஆசாரியர்களிடம்

செய்தான்! தான் செய்த செயலுக்காக துக்கமடைந்தாலும் அவனோ மனந்திரும்பவில்லை. அவன் உண்மையாகவே மனந்திரும்பியிருப்பானென்றால், தன் ஆண்டவரிடம் உள்ளம் உடைந்து சென்று மன்னிப்பு கேட்டிருப்பான். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை

மேற்கூறிய உதாரனங்களிலிருந்து எவைகள் உண்மையான மனந்திரும்புதல் இல்லை என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

Article by

**MR. RAJESH ANBU**

Men's Fellowship



# கிறிஸ்துவின் அன்பு

இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் கானா ஊர் கலியாண வீட்டில் திராச்சரசம் குறைவுபட்டபோது தண்ணீரை திராச்சரசமாக மாற்றி அற்புதம் செய்து குறைவை நிறைவாக்கினார். ஆகவே அவருடைய அன்பு நம்முடைய குறைகளை எல்லாம் நிறைவாக்குகிறது.

**“உமது நேசம் திராட்சை ரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது” - உன் 1:2**

கர்த்தருடைய அன்பை எதற்கு ஒப்படிடலாம் என்று தியானித்த பக்தன், பொன் செல்வங்களுக்கு ஒப்படிடலாமா அல்லது அரண்மனைகளுக்கும், அந்தஸ்துகளுக்கும் ஒப்படிடலாமா என்றெல்லாம் எண்ணியிருந்திருக்கக் கூடும். முடிவாக அவருடைய நேசத்தை திராட்ச ரசத்துக்கு ஒப்படிவதைப் பார்க்கிறோம்.

காரணம் என்ன? திராட்சப் பழம் பிழியப்படும்போது செந்நிறமாக அந்த சாறு வடிகிறது. இயேசு தன்னுடைய அன்பின் உச்சிதத்தை வெளிப்படுத்த விரும்பியபோது திராட்சப் பழம் பிழியப்படுவதுபோல கல்வாரி சிலுவையிலே பிழியப்பட்டார். அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு தன்னுடைய கடைசி சொட்டு ரத்தத்தையும் ஊற்றிக் கொடுத்தார். அந்த அன்புக்கு இணையான அன்பு ஒன்றுமே இல்லை.

இன்னும் அவர் சிநேகிதனாகவும், ஆத்மநேசராகவும் அன்பு கூறுகிறார். அந்த எல்லா அன்பைப் பார்க்கிலும் கல்வாரி சிலுவையிலே அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்ட அன்பு எதற்கும் ஒப்பிட முடியாத பெரிய அன்பாக இருக்கிறது. ஆகவே அவருடைய நேசம் திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது என்று வேதம் சொல்லுகிறது.

அவரது ஊழியத்தின் கடைசி நாள் வந்தது. கெத்செமனே தோட்டத்திற்கு செல்லுவதற்கு முன்பு தன் சீஷர்களோடு கடைசியாக போஜனம் பண்ணினார். திராச்சரசத்தை கையில் எடுத்து “இது உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய புது உடன்படிக்கையின் இரத்தமாய் இருக்கிறது” என்றார். ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் தண்ணீரை திராச்சரசமாக்கினவர், முடிவிலே திராச்சரசத்தை தம்முடைய இரத்தம் என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே, நமக்காக தன்னையே அர்ப்பணித்த தேவகுமாரனை நோக்கி பாருங்கள். அவருடைய சரீரம் பல பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, பிழியப்பட்டு இரத்தம் வடிந்தது அவருடைய அன்பே ஆகும்.

**“அந்த இயேசுவின் இரத்தம் வலிமையுள்ளது”**

**“இயேசுவின் இரத்தம் ஜெயம்”**




Article by

**SIS. ANN RUBALIN**

Women's Fellowship

## நம்பிக்கையின் செய்தி

**"என்னைப்பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பலனுண்டு"**
***(பிலிப்பியர் 4:13)***

வாழ்க்கையில் சில நேரங்களில் நாம் மிகவும் பலவீனமாகவும், துவண்டுபோனவர்களாகவும் உணர்கிறோம். சிக்கல்கள், தோல்விகள், நம்பிக்கையின்மை—இவை அனைத்தும் நம்மை அழுத்தும் போது, நாம் "என்னால் முடியாது" என்று நினைக்கத் தொடங்குகிறோம். ஆனால் வேதாகமம் நமக்கு ஒரு சக்திவாய்ந்த உண்மையை அறிவிக்கிறது:

***<u>சிறுகதை:</u>***

ஒரு சிறிய கிராமத்தில் அருள் என்ற இளைஞன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது. கல்வி கற்கும் ஆசை இருந்தாலும், பொருளாதார குறைபாடு காரணமாக அவன் பல தடைகளை சந்தித்தான்.

ஒருநாள் அவன் மிகவும் மனம் உடைந்திருந்தான். "என்னால் இதைத் தாண்ட முடியாது" என்று நினைத்தான். அப்போது அவன் பாட்டி அவனிடம் வந்து ஒரு வசனத்தை சொன்னாள்:

"கண்ணா, கிறிஸ்துவை நம்பு. அவர் உன்னை பலப்படுத்துவார். நினைவில் வை—'என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்யும் பலன் உண்டு."

அந்த வார்த்தைகள் அருளின் இதயத்தில் ஒரு தீபமாக எரிந்தது. அன்றிலிருந்து அவன் தினமும் ஜெபித்து, கடினமாக உழைத்தான். அவன் எதிர்கொண்ட சவால்கள் குறையவில்லை, ஆனால் அவன் மனதில் இருந்த பயம் குறைந்தது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அருள் தனது கிராமத்தில் முதல் பட்டதாரியாக உயர்ந்தான். அவன் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு சாட்சி ஆனது.

இந்த சிறுகதை நமக்கு ஒரு முக்கியமான உண்மையை கற்றுக்கொடுக்கிறது:
நாம் பலவீனமாக இருக்கலாம், ஆனால் கிறிஸ்து பலவானவர். நம் சக்தி குறைந்தாலும், தேவனின் சக்தி எப்போதும் நிறைந்தது.

***<u>வேதாகமம் சொல்லுகிறது:</u>***

- "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்." *(சங்கீதம் 28:7)*
- "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்." *(ஏசாயா 41:10)*

***<u>தேவனில் நம்பிக்கை வைத்த இளைஞன்– தாவீது</u>***

தாவீது ஒரு சாதாரண மேய்ப்பன். அவன் தனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் இதயத்தில் தேவனை மிகவும் நேசித்தான். அவன் வீணை வாசித்து தேவனைத் துதிக்கும் பழக்கம் இருந்தது.

ஒரு நாள், இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு பெரிய பிரச்சனை ஏற்பட்டது. கோலியாத் என்ற பெரிய வீரன் அவர்களை சவால் செய்தான். அவன் மிக உயரமானவன், மிகவும் வலிமையானவன். எல்லா போராளிகளும் பயந்து ஓடினார்கள்.

அப்போது, ஒரு இளைஞன்—தாவீது—முன்னே வந்தான்.

அவன் சொல்லியது மிகவும் ஆச்சரியமானது:
**"நான் இந்த கோலியாத்தை எதிர்த்து போராடுவேன்!"**

அவன் வாள், கவசம் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. வெறும் கல்லும் கவண் *(sling)* மட்டும் எடுத்துக் கொண்டான். தேவனில் நம்பிக்கை வைத்து கோலியாத்தை எதிர்த்தான்.



ஒரே ஒரு கல்லால் தாவீது கோலியாத்தை விழ்த்தினான்!

இந்த சம்பவம் ***1 சாமுவேல் 17***-ல் வருகிறது.

தாவீது சொன்ன ஒரு முக்கியமான வார்த்தை:

**“யுத்தம் கர்த்தருடையது”** *(1 சாமுவேல் 17:47)*

***இளைஞர்களுக்கு பாடம்:***

இந்தக் கதையிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்?

- வயது முக்கியமல்ல — நம்பிக்கை முக்கியம்
- சூழ்நிலை பெரியதாக இருந்தாலும், தேவன் அதைவிட பெரியவர்
- பயம் வந்தாலும், தேவனில் நம்பிக்கை வைத்தால் ஜெயம் கிடைக்கும்

இன்றைய இளைஞர்களுக்கு “கோலியாத்” என்ன?

- படிப்பு அழுத்தம்
- எதிர்கால பயம்
- குடும்ப பிரச்சனைகள்
- தோல்வி

ஆனால் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:
தேவன் உங்களுடன் இருந்தால், எந்த கோலியாத்தையும் ஜெயிக்கலாம்.

***நினைவில் கொள்ளுங்கள்:***

தாவீது ஒரு சாதாரண இளைஞன் தான். ஆளால் அவன் வாழ்க்கையை மாற்றியது அவன் நம்பிக்கை.

நாமும் இன்று ஒரு முடிவு எடுக்கலாம்:
**“நான் பயப்படமாட்டேன், ஏனெனில் தேவன் என்னுடன் இருக்கிறார்.”**

நாம் எதிர்கொள்ளும் எந்த சவாலும் பெரியதல்ல, தேவன் நம்முடன் இருக்கும்போது. நம்மை பலப்படுத்துகிற கிறிஸ்துவை நம்பி முன்னேறினால், நாம் நினைத்ததைவிட அதிகமாக சாதிக்க முடியும்.


**"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பலனுண்டு"** இது ஒரு வசனம் மட்டும் அல்ல—இது நம் வாழ்க்கையை மாற்றும் வாக்குறுதி.

**BY,**

**YOUTH FELLOWSHIP,**


**MRS.SHERRIN VERSLIN BENNY.**

# PRIMARY B







**SHAANA**







**JERNUS**







**SMYRNA**







JESIL






JOHANNA






ETHAN

**TEACHER – MRS. BEAULA YESURAJ**

# JOB 28-42
# யோபு 28-42

1. புத்தி என்றால் என்ன?
௨. யோபு யாரை இரட்சித்தார்?
3. சகல ஜீவாத்மாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரம் எது?
4. யோபு யாரைப்போல தம் மீறுதலை மூடவில்லை?
௫. எலிகூவை நெருக்கி ஏவுகிறது எது?
6. தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்தால் கிடைக்கும் பலன் என்ன?
7. மனுஷன் எங்கேத் திரும்புவான்?
8. பொல்லாதவர்களின் கூப்பிடுதலுக்கு மறு உத்தரவு உண்டா?
9. மந்தாரம் எழும்பப்போகிறதை அறியப்படுத்துவது எவை?
10. கர்த்தர் மேகத்தை எதினால் சிதறப்பண்ணுகிறார்?
11. களிமண் போல் வேறே ரூபங்கொள்வது எது?
1௨. கழுகு எங்கே சேரும்?
13. காட்டு மிருகங்கள் விளையாடுகிற இடம் எது?
14. லிவியாதான் உளுத்த மரமாக எதை எண்ணுகிறது?
1௫. யோபு கண்ட தலைமுறைகள் எத்தனை?

## ஏப்ரல்-௨0௨6 மாத வினாவிற்கான விடைகள்

1. யோபு 13:1௨
௨. யோபு 14:19
3. யோபு 1௫:34
4. யோபு 16:16
௫. யோபு 17:9
6. யோபு 18:௫
7. யோபு 19:௨௫
8. யோபு ௨0:௨௫
9. யோபு ௨1:30
10. யோபு ௨௨:௨௫
11. யோபு ௨3:1௨
1௨. யோபு ௨4:௫
13. யோபு ௨௫:௫
14. யோபு ௨6:13
1௫. யோபு ௨7:16

## ஏப்ரல்-௨0௨6 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்
திருமதி. ராதிகா செல்வக்குமார்
திருமதி. பிப்ளின் நெல்சன்
செல்வி. அஜின்ஷா
திருமதி. ரோஸ்மேரி

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 1௫ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.






Name:

Date:

Kids Coloring





## Bible Word Search

# Apostles / Disciples



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | I | J | E | H | J | F | X | T | U | Q | R | H | T | B |
| S | W | I | B | M | A | A | V | Q | O | P | O | U | Q | S |
| T | J | W | E | L | U | A | M | L | B | N | H | B | G | Z |
| W | U | N | Q | B | J | Y | W | E | I | G | H | B | Z | E |
| E | D | B | F | H | U | Q | J | C | S | G | D | F | O | E |
| H | A | B | A | R | T | H | O | L | O | M | E | W | Q | C |
| T | S | L | T | I | S | B | H | H | S | W | O | W | C | U |
| T | H | Z | Q | A | Q | N | N | P | P | F | W | Z | G | B |
| A | G | A | M | G | O | K | U | H | X | J | E | S | P | F |
| M | B | O | D | M | P | J | J | R | Z | F | R | X | I | J |
| Y | H | R | I | D | F | H | R | J | N | H | D | F | L | C |
| T | C | S | S | V | A | E | R | V | A | M | N | P | I | Y |
| H | P | T | W | X | T | E | V | P | H | U | A | D | H | O |
| R | K | Z | C | E | K | A | U | J | A | M | E | S | P | R |
| G | E | F | P | E | W | T | B | S | M | B | Y | C | O | Z |

Word list:

- PETER
- ANDREW
- JAMES
- JOHN
- PHILIP
- BARTHOLOMEW
- THOMAS
- MATTHEW
- JAMES
- THADDAEUS
- SIMON
- JUDAS



Name : ..............................................................

**WORD SEARCH**


FIND THE WAY

Name : ........................................................................



# Maze for David and the Giant

Help David to meet and do battle with the Giant.






**CROSS WORD**

Name : ..............................................................................

# Bible Crossword Puzzle



### Across

2. This led the wise men to baby Jesus
7. The first woman
12. The queen of what country came to see Solomon
13. What is it called when we talk to God?
14. Who wrote the 23rd Psalm?
15. Wisest man in the world
17. God created the world in how many days?
18. Two ladies argued about this
19. Who parted the Red Sea?
20. What kind of bird did Noah send out of the ark to see if the land was dry?

### Down

1. The town Jesus was born in
3. Long sharp weapon
4. Who created everything?
5. How many disciples did Jesus have?
6. Who was the first Jew?
8. What Solomon asked God for
9. The first man
10. Who is a descendant of Abraham and King David, and is the Savior of the world?
11. The first king of Israel who died in battle with his son, Jonathon
16. He built the ark



### Word Bank

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Solomon | Baby | Sword | Sheba | Adam | Eve | Wisdom |
| Star | Saul | Bethlehem | Moses | Abraham | Jesus | Noah |
| Dove | God | David | Twelve | Prayer | Six | |

# MAY - 2026

| | |
|---|---|
| 01-MAY | Master. Joyson Stubert |
| 01-MAY | Ms. Alen Maisie |
| 02-MAY | Master. Gain |
| 03-MAY | Mr. S. Ashok Kumar |
| 05-MAY | Mr. Appavoo Nicson Kennedy |
| 05-MAY | Mr. Stephen Pradeepkumar |
| 05-MAY | Mrs. Lavanya Kannan |
| 06-MAY | Ms. Shaana Liliya |
| 06-MAY | Master. Meshvin Tano |
| 07-MAY | Rev. S.P. Baskar |
| 08-MAY | Ms. Jesil Bernice |
| 08-MAY | Mr. K. Arunkumar |
| 09-MAY | Master. S. Yagan Leano |
| 09-MAY | Mrs. Renju Ampily Rajan |
| 10-MAY | Mrs. Beula Rani Livingston |
| 11-MAY | Mr. Rajesh ChellaDurai |
| 11-MAY | Mr. Jose Selva Kumar |
| 12-MAY | Mr. Suresh Babu |
| 12-MAY | Mr. Jerin |
| 13-MAY | Mr. Selvistor Solomon |
| 15-MAY | Mr. George Rose |
| 16-MAY | Mr. Selva Kumar |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

# MAY - 2026

| | |
|---|---|
| 16-MAY | Mrs. Nirmala Jenifer Paul |
| 17-MAY | Mrs. ArputhaMary Sandanam |
| 17-MAY | Master. B. Briston Isac |
| 18-MAY | Mr. R. Aruldhas |
| 18-MAY | Mrs. Shanthi Kristina Veni |
| 19-MAY | Mr. T. Robert Wilson |
| 19-MAY | Mr. P. Vijinraj |
| 19-MAY | Mr. B. Pushparaj |
| 20-MAY | Ms. Felicia Leenus Obed |
| 20-MAY | Mrs. Iswarya Obed |
| 22-MAY | Master. J.S. Iniyan Immanuel |
| 22-MAY | Master. S. Yagan Leano |
| 23-MAY | Mr. C. Havin Heba |
| 25-MAY | Mr. J. Meshach Gladson |
| 26-MAY | Ms. J.H. Juana |
| 27-MAY | Ms. Avisha |
| 28-MAY | Mr. Suresh Rajan |
| 28-MAY | Mr. M. Antony Ajin |
| 29-MAY | Ms. J.V. Kerenhappuch Abiah |
| 29-MAY | Ms. Rishita Kannan |
| 29-MAY | Master. Advik Bryan |
| 30-MAY | Ms. Aashika Arun Kumar |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

# MAY *Wedding* ANNIVERSARY

**03-MAY** Mr. Ashok Jayakumar Hanly Paul & Mrs. Blessy P

**03-MAY** Mr. Enock Prabhakaran & Mrs. Annie pamila

**04-MAY** Mr. Lawrence Gambeeram & Mrs. Augusta Lawrence

**06-MAY** Mr. R. Aruldhas & Mrs. Prasana

**07-MAY** Mr. Rahul Kumar Jaiswal & Mrs. Jancy Rani

**08-MAY** Mr. Thanu Lingam & Mrs. R. Preeda Nancy

**09-MAY** Mr. S.. Bervin Meshak & Mrs. Ann Rubalin

**12-MAY** Mr. Selva Kumar & Mrs. Radhika Grace Selva

**13-MAY** Mr. John Joseph & Mrs. Jessy Beula John Joseph

**16-MAY** Mr. S. Simeyon & Mrs. J.N. Basil Shallu

**19-MAY** Mr. Jose Selva Kumar & Mrs. Rena Ivelet Jasmine

**25-MAY** Mr. David Sornabalan & Mrs. Yesubai

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14

# MAY *Wedding* ANNIVERSARY

**25-MAY** Mr. Antony Jesu Rajan & Mrs. Jamuna Rani

**26-MAY** Mr. Rajesh ChellaDurai & Mrs. Shalini

**25-MAY** Mr. P. Vijinraj & Mrs. J.P. Pamela Jennifer

**29-MAY** Mr. Thangaraj Daniel & Mrs. Mercy Rajam

**26-MAY** Mr. Y. Mesiah Das & Mrs. Suja Jasmine Mesiah

**31-MAY** Dr. Livingston Samuel & Mrs. Segena Livingston

"Be completely humble and gentle; be patient, bearing with one another in love. Make every effort to keep the unity of the spirit through the bond of peace."
-Ephesians 4:2-3



# 19TH CHURCH DAY




















EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY